# சிந்தையில் நின்ற சேகர்கள்!

மண்ணில் பிறந்து மானிட வாழ்வில்,
முன்னும் பின்னும் முகவரி தேங்கி,
அகவரி தாக்கும் உறவும் நட்பும்;
அடுத்து எழுந்து மனத்தில் நிறையும்!

அன்றொரு நாள்தனில் குமார் என்னும்
கொற்றமாம் பெயரைச் சிந்தையி லேற்றி,
எடுத்துத் தொடுத்தப் பெயரின் பட்டியல்,
படித்துப் பார்த்து மகிழ்ந்து போற்றிய,

வடகை அண்ணன் சந்திர சேகரின்,
விழைவாய் இருந்திட மனதிலேற்றி,
விரைந்துக் கோத்திட மனத்தை ஆண்ட,
விழுமிய நட்பின் உறவில் சேகர்கள்;

எழுந்து நடந்திட எழுதிட வந்தேன்!
பள்ளியின் காலத்தில் தாத்தா வீட்டில்,
பயின்ற போது, உறவிலும் நட்பிலும்;
தொடர்ந்து வரும் தொலை தொடர்பு

பணியில் நிறைந்த வடகைச் சந்திர சேகர்!
அடுத்த வீட்டில் ராஜம் எனும் ராஜசேகர்;
பயணிக்கும் கவிதையின் பாலமாகிய,
எங்கள் மயிலாப்பூர் வழி அண்ணன்,

அமரிக்கா வாழும் மேலதெரு சந்திரசேகர்!
அனுமந்தபுரம் நண்பன் சேகரோடு கல்லூரியில்
கண்ட சந்திர சேகருண்டு! இல்லமருகில்
ஒட்டகுடியில் ஜோதி எனும்,சந்திரசேகர்,

அடுத்தத் தெருவிலும் திருச்சி,சுப்பையன்
அவரது மகன் சேகர்; எனவாய்,ஞானசேகர்,
குழிக்கரை கோயிந்து அவரது,மகன் குணசேகரன்,
என்பதுமாக சிலருடன்,பேரவைதலைவர்

அத்தைமகன் இலுப்பூர்சந்திர சேகர், அவருடன்
உறவினர் உடுமலை இராஜசேகர், எண்கண்
மாப்பிள்ளை சுந்தரசேகர்; பனசையின் மைந்தன்
இராஜசேகர் முருகையன்; மனக்கால் சந்திரசேகர்

ஈறாக, வாழ்விடம் அருகில், மெர்ஸி ஸ்டோர்ஸ்
இராஜ சேகர்! இராஜேஷ் என்னும் துர்காவின்
இராஜசேகர்அலுவலகம் தன்னில் நிறைந்த
சேகர்கள்;ஆதிநாளில் கூடுதல் ஆட்சியர்

சந்திரசேகர்,அடுத்து அன்பின் திருவல்லிக்கேணி
சேகர்,திருக்காட்டுப் பள்ளி குணசேகர், அமரரான,
அன்பின் குணசேகர், இரவிசேகர் ஆதிநாள்
அலுவலக,கண்காணிப்பாளர் இராஜசேகர், சந்திரசேகர்,

நொறுங்கத் திண்றால் நூறு வயது சந்திரசேகர்
என்றும் நீங்கா நினைவு பல்லாவரம் தனசேகர்!
காலாட்ட வீரன் சந்திரசேகர் இன்னும் சில
இராஜசேகர்கள், அன்பின்நிறை, எச். இராஜ சேகர்,

அடுத்து ஆர் இராஜசேகர், இன்னொருவரான
பி.வி.கே. இராஜசேகர்! முறுவல் வழியும்
மீசை தனசேகர், அடுத்து குள்ள தனசேகர்;
ஆதிநாள் ஜெயசேகர், ஜே.சி. சந்திரசேகர்

ஏ.டி.சி தனசேகர் அடுத்து, எம். சந்திரசேகர்,
செல்வசேகர் வீரசேகரன், தொடர்பில் சிலர் உண்டு,
முகவர் குழாமின், இன்றையத் தலைவர்
சீர்காழி ஆர்.என்.சேகர் கண்டர மாணிக்கம்

**மணிசேகர்,** திவாகரின் தனசேகர், பூரணம்
இராஜசேகர், சத்வா சோமசேகர் சினிமாத்துறைப்
பொறிகளின்இறக்குமதியாளர் சேகர், காலமான
கூடுவாஞ்சேரி சேகர், அலப்பறை ஐக்கி

தனசேகர், ஐ.சி. & எஸ். ஏ வின் சேகர், தமோடு,
திருச்சியில் சுங்கத்தில் கண்ட கிருஷ்ணன்
சேகரன், அக்கலால்துறை வழியில் மூன்று
சந்திர சேகர்கள்; சுங்க இல்லத்தில் அவராவர்

எடப்பாடியின் இளவல்,நெட்டை மனிதர்;
நக்கல் செய்யும் இனியவர், இப்படி நிறைந்திட,
நினைவில் தப்பினோர் எவரும் இருந்தாராகில்,
சேர்த்து மகிழ்வோம் சீரிய மகிழ்வினோடு!

- **கவிவளவன்** ஆகிய **கு.ப. அசோகன்**
13/15-10-2021